**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2023**

**P103 இக்காலக் கவிதையும் சிற்றிலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மணிக்கொடி கால கவிஞர்கள் இருவரைக் குறிப்பிடுக
2. புதுக்கவிதையின் வேறு பெயர்களைக் குறிப்பிடுக
3. பாரதியாரின் முதல் பாடல் எது? எந்த இதழில் வெளியானது?
4. பாரதிதாசன் படைப்புகளில் இரண்டினைக் குறிப்பிடுக
5. 'கையும் காலும் தானே மிச்சம்' யாருடைய கேள்வி இது ? இதற்கான பதில் யாது?
6. அப்துல் ரகுமான் தமிழ் மொழிக்கு அறிமுகப்படுத்திய இரு வேறு மொழி கவிதை வடிவங்களைக் குறிப்பிடுக?
7. மீராவின் குறும்பா நூல்களின் பெயர்களைக் கூறுக
8. பள்ளியெழுச்சி என்ற இலக்கிய வகை எந்தத் துறையில் இருந்து தோன்றியது?
9. பாடல்கள் எண்ணிக்கையில் அமைந்த இரு சிற்றிலக்கியங்களைக் கூறுக?
10. திருக்காவலூர் கலம்பகத்தின் ஆசிரியர் யார்?
11. ஆண்பால் பிள்ளைத்தமிழில் இடம் பெறும் இறுதி மூன்று பருவங்களின் பெயர்கள் யாவை?
12. தமிழ்விடு தூது நூலில் இடம்பெறும் பாட்டுடைத் தலைவன் யார் ?
13. ஒட்டக்கூத்தற்குரிய சிறப்பப் பெயர்கள் யாவை?
14. தஞ்சை மன்னனின் கொடை சிறப்பைச் சுட்டும் உவமை ஒன்றைக் கூறுக
15. உடல் உறுப்புகளைப் புகழும் நோக்கில் இயற்றப்பட்ட சிற்றிலக்கியம் இரண்டனைக் கூறுக

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பாரதியார், விடுதலைப்பற்றி கும்மி பாடல் மூலம் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக
2. பித்தன் கவிதையில் குழந்தைக்குக் கவிஞர் கூறும் செய்திகள் யாவை?
3. ஊசிகள் என்ற கவிதை நூலில் இடம்பெறும் அரசியல் அங்கதக் கவிதை ஒன்றைக் கூறுக
4. சிற்பியின் கவிதை உணர்த்தும் மனிதநேயக் கவிதை ஒன்றின் கருத்தை எழுதுக
5. சம உரிமைக்கான புரட்சியை முடியரசன் கவிதையில் எவ்வாறு பதிவு செய்துள்ளார்?
6. தக்கயாகப்பரணியில் கூளிகள் எவற்றை அரிசி ஆக்கிச் சமைத்தனர்?
7. விக்ரம சோழன் உலாவில் பட்டத்து யானை எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது?
8. திருக்காவலூர் மக்களுக்கு நிலவு சுடுவதில்லை ஏன்?
9. அறப்பளீசுர சதகத்தின் பாடுபொருள் குறித்து குறிப்பு வரைக?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

**1.** (அ) புதுக்கவிதை வளர்ச்சியில் வானம்பாடிக் கவிஞர்களின் பங்கினை விவரி.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் பொதுவுடைமைச் சிந்தனைகளை அவர் தம் கவிதை வழி விளக்குக.

**2.** (அ) சிற்பி கவிதைகளில் இயற்கையும் மனிதமும் பெறும் இடத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) கண்ணதாசன் கவிதைகளின் தத்துவக் கருத்தைப் புலப்படுத்துக.

**3.** (அ) சிற்றிலக்கிய வகைகளில் தூது, கலம்பகம், மடல், பள்ளு, குறவஞ்சி இலக்கியம் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) சரபேந்திர பூபால குறவஞ்சியில் வழி அறியலாகும் சரபேந்திர மன்னனின் சிறப்புகளைப் புலப்படுத்துக.

***